1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இவ்வாய்க்காலை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகளுக்கு ரூ. 61,800-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, இதுவரை ரூ. 50,600 செலவிடப்பட்டுள்ளது.

குமரி மாவட்டம், நீரேற்றுத் திட்டங்கள்

507 (*வினா எண். 8007). திரு. எப். எம். இராசரத்தினம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், இரணியல்-வள்ளியாறு நீரேற்றுத் திட்டம், இராசாக்கமங்கலம்—பன்றி வாய்க்கால் நீரேற்றுத் திட்டம், ஆகிய திட்டங்கள் பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட இரண்டு திட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கோதையாறு நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தயாரித்து வருகிறார்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களும் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் என்று அங்கே இருக்கின்ற மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, அந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ? அது எப்போது முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது யு.எஸ். எய்டோடு நடக்கின்ற திட்டம். ஆகவே, அது மத்திய அரசாங்கத்திலே ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கிற நேரத்தில் அவர்கள் ஒரு சில தகவல்களை எங்கள் மத்தியிலே கேட்டு இருந்தார்கள். அதை நாங்கள் தெரிவித்து இருக்கிறோம், அந்தத் திட்டத்திற்கு ரூ. 4,289 இலட்சங்கள் ஆகும்.